(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CC.No.246/2019**

CNR.No.TNNM08-002162-2019

Deposition of Prosecution/Defence/Court Witness for.PW. 6

| | | |
|---|---|---|
| Name | : | முனிராஜ் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of 13.10.2021

முதல் விசாரணை:

நான் தற்சமயம் குப்பாண்டபாளையத்தில் குடியிருக்கிறேன். வழக்கறிஞராக தொழில் செய்கிறேன். திருச்செங்கோடு PDM நீதிமன்றத்தில் ஓ.எஸ்.111/2006 வழக்கில் என்னை நீதிமன்ற ஆணையராக நியமித்ததன் அடிப்படையில் கடந்த 27.10.2018ம் தேதி திருச்செங்கோடு கிழக்கு ரத வீதியில் உள்ள ஒரு இடத்தை சர்வேயர் மற்றும் விஏஓ உடன் சென்று இடத்தை பார்வையிட்டு நீதிமன்ற ஆணையரின் அறிக்கையை மேற்படி நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். மேற்படி தாவா இடத்திற்கு சென்றபோது காலை சுமார் 10.00 மணி இருக்கும். அங்கிருந்த மேற்படி தாவா வாதி, பிரதிவாதிகள் ஒருவருக்கொருவர் வாக்குவாதம் செய்து கொண்டனர். என்னிடமும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். நான் அவர்களிடம் எனது நீதிமன்ற உத்தரவை காண்பித்து உத்தரவை நிறைவேற்றினேன். அங்கிருந்த நபர்கள் என்னை அளக்கக்கூடாது என்று தடுத்தனர், தடுத்தவர்கள் யார் என்று என்னால் தற்போது ஞாபகப்படுத்தி சொல்லமுடியவில்லை, அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துவிட்டேன். அறிக்கையை பார்த்தால் என்னால் சொல்லமுடியும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை.-

சம்பவம் எந்த தேதியில் நடந்தது என்றால் 27.10.2018ம் தேதி நடந்தது. நிலத்தை பார்வையிடுவதற்காக சென்றபோது எதிரி தரப்பு வழக்கறிஞர் reply எதுவும் கொடுத்தாரா என்றால் எனக்கு ஞாபகமில்லை. அறிக்கையை பார்த்தால் தான் என்னால் சொல்ல முடியும். நான் தாவா சொத்தை பார்வையிட்டு அளந்த போது தாவா சொத்தில் damages எதுவும் இருந்ததா என்றால் எனக்கு ஞாபகமில்லை, அறிக்கையை பார்த்தால் தான் சொல்ல முடியும். என்னிடம் காட்டப்படும்

அறிக்கையை பார்த்து சொல்லமுடியுமா என்றால் நகலை பார்த்து என்னால் சொல்லமுடியாது. தாவா சொத்து சேதாரம் இருந்தால் அதை நீதிமன்றத்தில் தனி அறிக்கை மூலம் அறிவித்திருப்பேன் என்றால் தனி அறிக்கை தேவையில்லை. ஆணையர் அறிக்கையிலேயே சொல்லலாம். நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது பூட்டு உடைக்கப்பட்டிருந்ததா என்றால் அறிக்கையை பார்த்து தான் என்னால் சொல்ல முடியும். தற்போது சொல்ல முடியாது. நான் சம்பவ இடத்திற் குசென்றபோது எதிரிகள் அரிவாள் போன்ற ஆயுதங்களை வைத்து மிரட்டிக்கொண்டிருந்தார்களா என்றால் இல்லை. நான் நிலத்தை பார்வையிட்டு முடிக்கும் வரையில் எதிரிகள் அரிவாள் எடுத்து வந்து வாதிகளையோ என்னையோ மிரட்டினார்களா என்றால் எனக்கு தெரியாது. போலிசார் விசாரணையின்போது எதிரிகள் அசிங்கமான வார்த்தைகளால் திட்டியதாக சொல்லியுள்ளேன் என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. தாவா சொத்தை சம்பவ தினத்தன்று அளந்து முடித்துவிட்டேன் என்றால் சரிதான். அளந்து முடித்து அறிக்கை சமர்ப்பித்து விட்டேன்.

மறுவிசாரணை.- இல்லை.